கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2023
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
2002 முதல் 21 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA எனும் முகவரியில் நடைபெற்று வருகின்றது
06/01/24	தமிழ்ப் பாடசாலை புதிய தவணைக்காக ஆரம்பமாகும்.
27/01/24	தமிழ்த்திறன் போட்டி

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am






ஒளி விழா

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக தமிழ்ப் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வானது 16/12/23 அன்று தமிழ்ப் பாடசாலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஒளிவிழா பொறுப்பாசிரியையும், தமிழாசிரியையுமான திருமதி அனற் செபமலர் கிருஷ்ணதாஸ் அவர்களின் தலைமையில், தமிழாசிரியை திருமதி சிவாஜினி அமலதாஸ் அவர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். விழாச் சுடர்களை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் அவர்களும், தமிழ்ப் பாடசாலைப் பொறுப்பாளர் திரு ரவீந்திரன் வள்ளி அவர்களும், நிகழ்ச்சிப் பொறுப்பாசிரியை திருமதி அனற் செபமலர் கிருஷ்ணதாஸ் அவர்களும், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் கனிஷ்ட உபதலைவர் திரு விஜயரூபன் விவேகானந்தம் அவர்களும், கலாசார இணைப்பாளர் திரு திருவரங்கன் மகாலிங்கம் அவர்களும் ஏற்றிவைத்தனர்.



வரவேற்புரையினை தமிழாசிரியை திருமதி அனற் செபமலர் கிருஷ்ணதாஸ் வழங்க, தலைமையுரையை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவர் திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்கள் வழங்கினார்.

கடவுள் வணக்கப் பாடலை தமிழ் ஆசிரியைகள் திருமதி அனற்செபமலர் கிருஷ்ணதாஸ், திருமதி சிவாஜினி அமலதாஸ் திருமதி புஷ்பா தவத்துரை ஆகியோர் வழங்க, கலை நிகழ்வுகள் ஆரம்பமானது.



கொவன்றி தமிழ் மொழிக் கலைக்கழக பாடசாலையின்
ஒளிவிழா கலைநிகழ்வுகள் - 2023.

பாலர்பிரிவு - 01 (Nursery)

அபிநயப் பாடல் - கிறிஸ்மஸ் தாத்தா வாராங்க.....

- மிதுனா - மிதுனன்
- நிதுன்யா - மிதுனன்
- ஆர்ஜன் - மதீந்திரன்
- பிரீயா - பிரீராம்
- அர்த்திகன் - சீலன்
- றிகாஷ் - சந்திரகாசன்
- றமிலிம் - அரவிந்தன்
- நிவேதன் - நிதர்சன்
- மிருதுஜன் - டமீந்திரன்
- அபிநாய் - சங்கர்.
- தமிழரசி - சுகந்தன்.

பாலர்பிரிவு - 00 - (Reception)

அபிநயப்பாடல் - குட்டிக் குட்டி மூசாய்....

- கீரூல்லானா - கிரிண்ணராஜன்.
- சுருதி - கோகில மெனின்
- மோகித்ரா - பிரபு
- நான்சி - தக்சீவ்
- ஜென்சி - தக்சீவ்

Key board சுருதிட்டு இசை.

- அஜன் - ஜெயசங்கர்.
- உசாலி - கோண்டீபன்.

தரம் - 01

அபிநயப் பாடல்

- பவிஜன் - அருவித்தன்.
- கீரிஜன் - மயூரன் (யேசு பாத்திரம்)
- லதுஜன் - திருமுருகன்
- நிதீதன் - நிதீதன்.
- றினிஷா - தனிஸ்வரன்.
- நாமுஜா - அகிலன்.
- தரகி - ரூபிக்குமார்.
- ஜர்வனி - பிரசாகரன்

தரம் - 01, தரம் - 02.

1) பாடல் - யேசுவின் வாழ்வியல் பாடல்..


- கீரிஜன் - மயூரன்
- பவிஜன் - அருவித்தன்
- ஆர்ஜன் - சுகந்தன்
- நிதீதன் - நிதீதன்
- தினிஷா - தனிஸ்லரன்
- டிவாசினி - ஜெகநாதன்

2) கீர்த்தனை.

மாதுரி - மகிஸ்வரன்

3) திருக்குடும்பம் காட்சிப் படுத்தல்

திற்றை - ஜெகதீப்பு
ஜேக ரிஷ்ரின் - றொயேட் மகிமைஸ் - தரம் - 02
தாய் - மரியாள்
ரிகஸ்ரா - றொயேட் மகிமைஸ் - தரம் - 02
யேசு பாலன்.



தீய நடனம்

- மிரிஷா - தேதீஸ்வரன்.
- காஜுஜா - அகிலன்
- தரகி - ரூபிக்குமார்.
- பிலீனா - நிதீதன்.

தரம் - 03

1) பாடல் - சின்ன சின்ன பாலகா....

- கவிஷன் - இராகதந்திரன்
- நிகிஷன் - பகீரதந்தராஜா.
- சந்தோஷ் - சிவகரன்
- யாசு - றஜிகரன்
- அரவந் - அன்பழகன்
- உர்ஷிதா - ஜெயசங்கர்.

2) மயலின் இசை.

- உர்ஷிதா - ஜெயசங்கர்.

தரம் - 04.

அபிநயப் பாடல் - பிறந்தார் பிறந்தார் யேசு பிறந்தார்.....

- அர்ஷினி - விஜெயரூபன்
- தருண்யா - பகீரதன்
- லக்ஷன் - திருவருங்கன்
- அம்ரித்தா - சந்திரமோகன்
- மிங்கா - சிர்வானந்தலிங்கம்
- அகஷயன் - அகிலன்
- சுர்வேஷர் - அகௌரிசங்கர்
- சித்தார்தர் - அகௌரிசங்கர்.

தரம் - 05

1) கவிதை - யேசுபாலன் பிறப்பு

- டனீஷ்யன் - றொபின்சன் அமலதாஸ்.

2) பாட்டு

- திந்துயா - அகிலன்.

3) யேசுவின் அற்புதனைகள்

- பரீந்தனா - பிரபுசங்கர்.

தரம் - 07

1) யேசுவின் பொன் மொழிகள்

- மதீபன் - சொந்தரராஜன்
- மதீரன் - சொந்தரராஜன்

2) கவிதை - மார்கழி தீயவும் பாலகனை...

- அர்ஜன் - விஜெயரூபன்
- அக்ஷயன் - சுகந்தன்

தரம் - 08 / 09

யேசு - யேசுபாலன் பிறப்பு.

- ஆதுஜனா - ரூபிகாந்தன்
- லக்ஷ்மிதா - ஊருத்திரன்

ஒளிவிழா கலைநிகழ்வு பொறுப்பு ஆசிரியை :-

திருமதி அனற்செபமலர் - கிருஷ்ணதாஸ்.

எமது மழலைகளின் அருமையான கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு பகீரதன் ஸ்ரீநாதன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.








































அதனைத் தொடர்ந்து, நத்தார் பாப்பாவின் வருகையால், அனைவருமே பாடல், ஆடல் என மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.



வந்தீத நத்தார்

பெத்லேம் புனித நகரிலே
மாட்டுத் தொழுவத்திலே
மார்கழி இருபத்தைந்திலே
இயேசு பாலன் பிறந்தாரே
இயேசு பிறந்த நாளே நத்தார்

மனுக்குலத்தை மீட்கவே
பாவங்களை மன்னிக்கவே
பாவிகளை இரட்சிக்கவே
குழந்தைகளை தேடிக்கவே
பரமன் இயேசு உதித்தாரே

தீமைகள் விலகி நன்மைகள் பெருகவே
மன இருள் நீங்கி ஒளி பிறக்கவே
நற்செய்திகளைப் போதிக்கவே
பாரினில் இவரே அவதரித்தாரே
இயேசு நாதர் இவ்வுலகில்
மனிதனாகப் பிறந்த நாளே நத்தார்

நத்தார் தின வாழ்த்துக்கள்
நன்றி

கவிதை - மயூரன்
தரம் - 1

மார்கழி உற்சவம்

கொவன்றியில் கோலாகலமாக நடைபெற்ற மார்கழி உற்சவம் என்ற நிகழ்ச்சியில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களான 'பரதக்கலாவித்தகர்' 'கலைமாணி' ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்வி ஆரதி சியாமளன், செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன், செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ், செல்வி வர்ஷிதா ஜெயசங்கர், செல்வி நேகா டினேஷ்குமார் ஆகியோரும், 'நுண்கலைமாணி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜென்சிகா சிவா, செல்வி அபிநயா ரமணன், செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி ரிதன்யா மோகன் ஆகியோரும் நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

ஈழத்து புலமைகள் (பாகம்15)

கடந்த இரண்டு இதழ்களிலே!!

யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த சின்னத்தம்பி புலவர் அவர்கள் பற்றிய விரிவான தகவல்களை தந்திருந்தேன். இந்த வாரத்தில் மாதகலில் வாழ்ந்த கற்றறிந்த மரபில் வந்த வையா எனும் புலவர் வழியில் வந்த சிற்றம்பலப் புலவர் சகோதரியின் மகனாகப் பிறந்த மயில் வாகனப்புலவர் பற்றிப் பார்க்கலாம்.

மாதகல் மயில்வாகனப்புலவர்.

மாதகல் மயில் வாகனப்புலவரால் எழுதப்பட்ட புலியூரந்தாதி எனும் நூலின் முன்னுரையில் வரும் செய்யுளொன்றைக் காண்போம்.

" நெய்யார்ந்த வாட்கை பரராசசேகரன் பேர் நிறுவி
மெய்யாக நல்லை கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
வையாவின் கோத்திரத்தான் மயில்வாகனன் மாதவங்கள்
பொய்யாத வாய்மை புலியூரந்தாதி புகன்றனனே"

எனும் செய்யுளால் அறியப்படும். இவர் வண்ணார் பண்ணை சிவன் கோவிலைப் புதிதாக கட்டுவித்த வைத்திய லிங்க செட்டியாருடன் கற்றவர் என்றும், இருவரும் தமிழ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த கூழங்கை தம்பிரான் அவர்களிடம் கற்றவர்கள் என்பதும் அறியக்கிடக்கிறது.

கூழங்கை தம்பிரான் மிகவும் வேகமாகக் கற்பிக்கும் ஆசிரியர் என்றும் அவரிடம் கற்ற பலர் இடையிலேயே விலகி வேறு ஆசிரியரிடம் சென்றனர் என்று கூறுவோரும் உண்டு. வைத்தியலிங்க செட்டியார் சற்று மெதுவாக கற்பவர் என்றும் மயில்வாகனப் புலவரே மீள் பாடம் சொல்லிக்கொடுப்பார் என்றும் கூறுவர். இவரால் எழுதப்பட்ட நூல்களாவன ; புலியூர் யகமவந்தாதி, யாழ்ப்பாண வைபவம், ஞானலங்கார நாடகம், காசியாத்திரை விளக்கம் என்பனவாகும்.

மயில்வாகனப்புலவரால் பல நூல்கள் எழுதப்பட்டாலும், சில நூல்களே யாழ் நூலகத்தில் ஒரு காலத்திலே இருந்தன. அவையெல்லாம் எரித்து அழிக்கப்பட்ட வரலாறு உண்டு.

புலியூர் யகமவந்தாதிக்கு உரை எழுதியவர் சிறந்த உரையாசிரியர் எனப்புகழ்பெற்ற ம.க.வேற்பிள்ளை அவர்களாவர். "யாழ்ப்பாணவைபவமாலை" ஒரு வசன நடை நூலகும். புலியூர் யகமவந்தாதியில் இருந்து ஒரு செய்யுள் காண்போம்.

"பயசங்கண்டு பரியாக்கியாத பத்தற்கிளிய
பாயசங்கண்டு நிகள்புலியூர் பகையை வெல்லு
பயசங்கண்டுகரத்தாற்கரிய பழவினைக்குப்
பாயசங்கண்டொட ராதென்னை யாள்க பராபரமே"

இச்செய்யுளிலே கையாளப்பட்ட சில சொற்களின் கருத்துக்களைக் காண்போம்.

பாய் - பாய்கின்ற
அசம் - ஆடு
பரி - குதிரை
பாயசம் - பாற்சோறு.
வெல் உபாய - வெல்லும் உபாயம் கொண்ட
சங்கு அண்டு கரத்தாற்கு - கையில் சங்கு ஏந்திய திருமால்
குப்பாயம் - சட்டை
கும் - பிறப்பு.

மயில் வாகனப்புலவரும் சுன்னாகத்தில் வாழ்ந்த வர கவி வர்த பண்டிதரும் ஒரே காலத்தவர்களாவர். வரதபண்டிதர் எழுதிய சிவராத்திரி புராணம் எனும் நூலிற்கு சிறப்புப்

பாயிரக்கவி ஒன்றை மயில்வாகன்புலவர் எழுதியுள்ளார்.

அதைக்காண்போம்.

"பரத ரசனும்ரசல ராசன் மகள்
பங்கணன் புதரு பண்பு சேர்
விரத ராச சிவ நிசியினீள் சரித
மிக விளங்கிட விளம்பினான்
கரத ராசனைய மொழி ரங்கனருள்
கருணை மாரி நிகர் பருணிதன்
வரத ராசன் மறைவாண ரசன் மிகு
மதுர கவி ராசனே"

(புரிதலுக்காக சில சொற்களின் விளக்கம் தருகிறேன்.

அசலராசன் - இமயம்.
சிவ நிசி-சிவராத்திரி.)

ஒப்பீடு;

மாதகல் மயில் வாகன்புலவரும்,வைத்திய லிங்க செட்டியாரும்,சுன்னாகம் வரகவி வரத பண்டிதரும், இருபாலை சேனாதிராய முதலியாரும் ஒரேகாலத்தவர்கள் என்பது தெளிவு.

(அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services



அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்